**IN THE COURT OF ADDITIONAL CHIEF JUDICIAL MAGISTRATE, KUMBAKONAM**

| | | |
|---|---|---|
| **MCOP No. 232/2023** | **நாள் – 27.03.2026** | **சாட்சி – ம.சா.1** |

**ஆனந்தி , க/பெ. ரமேஸ்குமார்**

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு 2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் தாராசுரத்தில் இருந்து பாபநாசம் செல்வதற்காக தாராசுரம் பேருந்து நிலையத்தில் காத்திருந்தேன் என்றால் சரிதான். பேருந்து நிலையம் தாராசுரம் மார்க்கெட்டிற்கு அடுத்துள்ளது என்றாலும் அதற்கு 50 மீட்டர் தள்ளி தெற்கே மேற்கு திருப்பம் உள்ளது என்றால் சரிதான். தாராசுரம் சாலையானது பேருந்து நிலையத்தின் வழியாக கும்பகோணத்திலிருந்து தஞ்சாவூருக்கு நகர பேருந்து மற்றும் பல பேருந்துகள் அதிகமாக செல்லும் என்றால் சரிதான். 5 நிமிடத்திற்கு ஒருமுறை பேருந்துகள் செல்லுமென்றால் சரிதான். தாராசுரத்திற்கு அடுத்து முக்கிய பேருந்து நிறுத்தம் பாபநாசம் என்றால் சரிதான். நான் எந்த வகுப்பு வரை படித்திருக்கிறேன் என்றால் 12 ம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். பேருந்தில் பின் படி வழியாக ஏறி முன் படி வழியாக செல்ல வேண்டுமென்ற விதிமுறை தெரியுமா என்றால் தெரியும். ம.சா.ஆ.1 க்கான புகாரை யார் கொடுத்தது என்றால் என் தம்பி கொடுத்தார். அதில் உள்ள விவரங்கள் தெரியுமா என்றால் தெரியும். நான் பேருந்தில் ஏறும்பொழுது நிறைய நபர்கள் நின்றிருந்தார்கள் என்றால் சரிதான். நான் பேருந்தில் ஏறிய 1 நிமிடத்தில் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். பேருந்தானது 5 நிமிடத்திற்கு ஒரு முறை இருக்கும் பட்சத்தில் நான் ஏறிய பேருந்தில் பயணிகள் நின்றுக்கொண்டிருக்கும் பட்சத்தில் அந்த பேருந்தை விடுத்து வேறு பேருந்தில் ஏறி இருந்தால் விபத்தை தவிர்த்து இருக்கலாம் என்றால் சரிதான். நான் பேருந்தின் முன் வழியாக ஏறியபொழுது விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். நான் பேருந்தில் ஏறியபொழுது முன் படிக்கட்டில் நபர்கள் நின்றுக்கொண்டிருந்தார்கள் என்றால்

சரியல்ல. 1 ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான தொலைதுரம் செல்லும் பேருந்தில் ஏறினேன் என்றால் சரிதான். பேருந்தானது ரவுண்டானாவில் திரும்பும்போது எனது அஜாக்கிரதையால் கம்பியை பிடிக்காமல் கீழே விழுந்துவிட்டேன் என்றால் சரியல்ல. எனது அஜாக்கிரதையால் இந்த விபத்து ஏற்பட்டதால் 2 ம் எதிர்மனுதாரர் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல. திருச்சி காவேரி மருத்துவமனையில் நான் அனுமதிக்கப்பட்டிருக்கும் பட்சத்தில் தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி இருக்கும் பட்சத்தில் அங்கு என்னை சேர்த்திருந்தால் இலவச சிகிச்சை கிடைத்திருக்கும் என்றால் எனக்கு அப்போது சுயநினைவு இல்லை. திருச்சி காவேரி மருத்துவமனையில் வழங்கியுள்ள மருத்துவ ரசீதுகளில் என் பெயர் உள்ள அசல் ரசீதுகளை தவிர மற்ற ரசீதுகள் ஏற்புடையதல்ல என்றால் சரிதான். அன்பு மருத்துவமனையில் நான் சிகிச்சை பெற்றதாக கூறும் பட்சத்தில் அதற்கான ரசீதுகள் மற்றும் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். நீ.ம.சா.ஆ1 ல் எனக்கு நிரந்தர ஊனம் இருப்பதாக குறிப்பிடபடவில்லை என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு மிக அதிகம் என்றாலும் அதனை 2 ம் எதிர்மனுதாரர் வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றாலும் சரியல்ல. நான் பேருந்தில் ஏறியபோது நடத்துநரை பார்த்தேனா என்றால் பார்த்தேன்.

*Typed to my dictation in open Court, read over to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.*

G. MANIKANDARAJA

Digitally signed by G. MANIKANDARAJA
Date: 2026.03.27 18:19:56 +0530

*Additional Chief Judicial Magistrate,*
*Kumbakonam.*